## மார்ச் – 31 – தவக்கால 04ம் ஞாயிறு

### முதல் வாசகம்: யோசுவா 5 : 9, 10 – 12

ஆண்டவர் யோசுவாவிடம், "இன்று எகிப்தியரின் பழிச்சொல்லை உங்களிடமிருந்து நீக்கிவிட்டேன்" என்றார். ஆகவே அந்த இடம் இந்நாள்வரை"கில்கால்" என்று அழைக்கப்படுகின்றது. இஸ்ரயேலர் கில்காலில் தங்கினர். மாதத்தின் பதினான்காம் நாள் மாலை எரிகோ சமவெளியில் பாஸ்கா கொண்டாடினர். பாஸ்காவின் மறுநாள் நிலத்தின் விளைச்சலையும் புளிப்பற்ற அப்பத்தையும் வறுத்த தானியத்தையும் உண்டனர். நிலத்தின் விளைச்சலை உண்ட மறுநாளிலிருந்து மன்னா நின்றது.இஸ்ராயேலருக்கு மன்னா மீண்டும் கிடைக்கவில்லை. கானான் நிலத்தின் விளைச்சலை அந்த ஆண்டு உண்டனர்.

**பதில்பாடல் :** ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்.

### நற்செய்தி: லுக்கா 15 : 1 – 3, 11 – 32

அக்காலத்தில், வரிதண்டுவோர், பாவிகள் யாவரும் இயேசு சொல்வதைக் கேட்க அவரிடம் நெருங்கிவந்தனர்.பரிசேயரும், மறைநூல் அறிஞரும், "இவர் பாவிகளை வரவேற்று அவர்களோடு உணவருந்துகிறாரே" என்று முணுமுணுத்தனர். அப்போது அவர் அவர்களுக்கு இந்த உவமையைச் சொன்னார். மேலும் இயேசு கூறியது "ஒருவருக்கு இரண்டு புதல்வர்கள் இருந்தார்கள். அவர்களுள் இளையவர் தந்தையை நோக்கி, "அப்பா, சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாரும்" என்றார். அவர் சொத்தை அவர்களுக்குப் பகிர்ந்து அளித்தார். சில நாள்களுக்குள் இளைய மகன் எல்லாவற்றையும் திரட்டிக்கொண்டு, தொலை நாட்டிற்கு நெடும் பயணம் மேற்கொண்டார் அங்குத் தாறுமாறாக வாழ்ந்து தம் சொத்தையும் பாழாக்கினார். அனைத்தையும் அவர் செலவழித்தார். பின்பு அந்த நாடு முழுவதும் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அப்பொழுது அவர் வறுமையில் வாடினார். எனவே, அந்நாட்டுக் குடிமக்களுள் ஒருவரிடம் அண்டிப் பிழைக்கச் சென்றார். அவர் அவரைப் பன்றி மேய்க்கத் தம் வயல்களுக்கு அனுப்பினார். அவர் பன்றிகள் தின்னும் நெற்றுகளால் தம் வயிற்றை நிரப்ப விரும்பினார். ஆனால் அதைக்கூட அவருக்குக் கொடுப்பார் இல்லை. அவர் அறிவு தெளிந்தவராய், "என் தந்தையின் கூலியாள்களுக்குத் தேவைக்கு மிகுதியான உணவு இருக்க, நான் இங்குப் பசியால் சாகிறேனே! நான் புறப்பட்டு என் தந்தையிடம் போய், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன். இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன் உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக் கொள்ளும் என்பேன்" என்று சொல்லிக்கொண்டார். "உடனே அவர் புறப்பட்டுத் தம் தந்தையிடம் வந்தார். தொலையில் வந்துகொண்டிருந்தபோதே அவர் தந்தை அவரைக் கண்டு, பரிவு கொண்டு, ஓடிப்போய் அவரைக் கட்டித் தழுவி முத்தமிட்டார். மகனோ அவரிடம், "அப்பா, கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன் இனிமேல் நான் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்" என்றார். தந்தை தம் பணியாளரை நோக்கி, "முதல்தரமான ஆடையைக் கொண்டுவந்து இவனுக்கு உடுத்துங்கள் இவனுடைய கைக்கு மோதிரமும், காலுக்கு மிதியடியும் அணிவியுங்கள். கொழுத்த கன்றைக் கொண்டு வந்து அடியுங்கள் நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். ஏனெனில், என் மகன் இவன் இறந்துபோயிருந்தான் மீண்டும் உயிர் பெற்று வந்துள்ளான். காணாமற்போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். அவர்கள் மகிழ்ந்து விருந்து கொண்டாடத் தொடங்கினார்கள். அப்போது மூத்த மகன் வயலில் இருந்தார். அவர் திரும்பி வீட்டை நெருங்கி வந்துகொண்டிருந்த போது, ஆடல் பாடல்களைக் கேட்டு, ஊழியர்களுள் ஒருவரை வரவழைத்து, "இதெல்லாம் என்ன?" என்று வினவினார்.அதற்கு ஊழியர் அவரிடம், "உம் தம்பி வந்திருக்கிறார். அவர் தம்மிடம் நலமாகத் திரும்பி வந்திருப்பதால் உம் தந்தை கொழுத்த கன்றை அடித்திருக்கிறார்" என்றார். அவர் சினமுற்று உள்ளே போக விருப்பம் இல்லாதிருந்தார். உடனே அவருடைய தந்தை வெளியே வந்து, அவரை உள்ளே வருமாறு கெஞ்சிக் கேட்டார். அதற்கு அவர் தந்தையிடம், "பாரும், இத்தனை ஆண்டுகளாக நான் அடிமைபோன்று உமக்கு வேலை செய்துவருகிறேன். உம் கட்டளைகளை ஒருபோதும் மீறியதில்லை. ஆயினும், என் நண்பரோடு நான் மகிழ்ந்துகொண்டாட ஓர் ஆட்டுக்குட்டியைக்கூட என்றுமே நீர் தந்ததில்லை. ஆனால், விலைமகளிரோடு சேர்ந்து உம் சொத்துகளையெல்லாம் அழித்துவிட்ட இந்த உம் மகன் திரும்பி வந்தவுடனே, இவனுக்காகக் கொழுத்த கன்றை அடித்திருக்கிறீரே!" என்றார். அதற்குத் தந்தை, "மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய் என்னுடையதெல்லாம் உன்னுடையதே. இப்போது நாம் மகிழ்ந்துகொண்டாடி இன்புற வேண்டும். ஏனெனில் உன் தம்பி இவன் இறந்து போயிருந்தான் மீண்டும் உயிர்பெற்றுள்ளான். காணாமற் போயிருந்தான் மீண்டும் கிடைத்துள்ளான்" என்றார். "

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் அன்று தாவீதை தெரிந்தெடுத்து அபிஸேகித்த இறைவன் இன்று எங்களையும் அபிஸேகித்து வழிநடத்தி வருகின்றார். இவ்வாறு அபிஸேகப்படுத்தப்பட்ட நாங்களும் அவர் அழைப்பை ஏற்றுக்கொண்டு எங்களைத் தயார்படுத்த அழைத்து நிற்கின்றது. இன்றைய முதல் வாசகத்தில் பார்ப்பது போன்று ஆணடவர் யார் யாரையெல்லாம் தெரிந்தெடுக்க விரும்புகின்றாரோ அவர்கள் ஒவ்வொருவரையும் எண்ணையினால் அபிஸேகித்து ஆவியின் வல்வமையைப் பொழிகின்றார். அன்று ஆண்டவர் சாமுவேலை அழைத்து, பெத்தலகேமைச் சேர்ந்த ஈசாயின் மகனின் ஒருவனை அபிஸேகிக்கும் படியும், அவன் யார் என்று உனக்குத் தெரிவிப்பேன் என்று அனுப்புகின்றார். அவரும் அங்கு சென்று ஈசாயின் மக்களில் இளையவனான சிறுவன் தாவீதை ஆண்டவரின் விருப்பப்படி அபிஸேகிக்கின்றார். (1சாமு.16:13) அவரும் தூய ஆவியாரின் வல்லமையைப் பெற்றுக்கொண்டு ஒளியின் மகனாக வாழ்ந்தார். அழைத்தல், அபிஸேகித்தல் என்பது மனிதரால் முடியாத காரியம், ஆனால் இறைவனின் சித்தத்தினால் மட்டுமே அது ஆகும். நாங்களும் கூட திருமுழுக்கு என்னும் அருட்சாதனத்தின் மூலம் "கிறிஸ்மா" என்னும் எண்ணெயினால் அபிஸேகம் செய்யப்பட்டு கிறஸ்தவன், கிறஸ்தவள் என்ற உரியைப் பெற்றுள்ளோம். இவ்வாறு அபிஸேகம் செய்ப்பட்டுள்ள நாங்கள் ஒளியின் மக்களாக வாழ்கின்றோமா? என்பது கேள்விக்குறியாகும். ஏனெனில் நாங்கள் பாவத்திற்குள் சிக்குண்டவர்களாக எழுந்து நடக்க முடியாமல் யார் விடுதலை தருவார் என்று ஏங்கித் தவிக்கின்றோம். ஆனால் இயேசு ஒருவரால்தான் முடியும் என்பதை மறந்து மற்றவர்களுடன் பகிர்ந்து கொண்டு வாழ்கின்றோம். "நானே உலகின் ஒளி என்னைப் பின்செல்பவன் இருளிலே நடவான்" என்று இறைவார்த்தையில் இயேசு கூறி தன்னை வெளிப்படுத்துவதை நாங்கள் மறந்து விடுகின்றோம். நற்செய்தி வாசகத்தில் பார்வையற்ற ஒருவரை உமிழ் நீரால் சேறு உண்டாக்கி சீலோவாம் குளத்தில் கழுவும்படி கூறி அவரைக் குணப்படுதினார். ஏனெனில் அவரின் மூலமாக அவரது நாமம் மகிமைடும்படியே இறைவன் விரும்பினார். இவ்வாறு எமக்கும் ஏற்படுவது நாங்கள் பாவத்திலிருந்து விடுபட்டு அவரது நாம்மை மகிப்படுத்தப்படவே, எனவே இன்று நாங்கள அவரை மகிமைப்படுத்தப்படியாக என்ன செய்திருக்கன்றோம்? என்பதை சிந்தித்துப் பார்ப்போம். இத்தவக்காலங்களில் இயேசுவை மகிமைப்படுத்தும்படியாக முழு உள்ளத்துடன் செப, தப முயற்சிகளில ஈடுபட்டு அவரது ஒளியிலே நடந்து அவரது சாட்சியின் பிள்ளைகாக வாழ எங்களைத் தாா்படுத்துவோம்.